ஆசிரியர் அறிமுகம்

பெயர்:

முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அத்தமீமீ ﵀

பிறப்பு:

ஹிஜ்ரி 1115 (கி.பி. 1703)

பிறந்த இடம்:

சஊதி அரேபியாவின் ரியாத் நகரத்திலிருந்து வடமேற்காக சுமார் 45 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் 'அல்உயைனா' என்ற சிறு கிராமம்.

குடும்பம்: அல்முஷ்ரிஃப்

வமிசம்: பனூ தமீம்

பாட்டனார்: சுலைமான் ﵀ 'அல்உயைனா' அமைந்திருந்த நஜ்து மாகாணத்தின் பிரபல அறிஞர். குர்ஆன் விளக்கம், நபிமொழித் துறை, ஃபிக்ஹ் (சட்டவியல்) மற்றும் அரபுமொழி ஞானம் போன்ற வற்றில் தேர்ச்சி பெற்றவர். உயைனாவின் அரசர் அப்துல்லாஹ் இப்னு முஅம்மர், இவரை மிகவும் சங்கைப்படுத்தி, மார்க்கத் தீர்ப்புகளுக்கு இவரிடம்தான் ஆலோசனை கலப்பார். இவரிடம் கல்வி பயில நஜ்தின் பல பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் வந்தனர். மக்கள் தங்கள் மார்க்கச் சந்தேகங்களுக்கும், தீர்ப்பு களுக்கும் இவரை அணுகினர்."துஹ்ஃபத்துன் நாசிக் ஃபீ அஹ்கா மில் மனாசிக்" என்ற நூல் இவரின் மார்க்க ஞானத்திற்கு மிகப் பெரிய சான்று. ஹிஜ்ரி 1079 (கி.பி. 1668)இல் மரணமானார்.

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

اِعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ يَجِبُ عَلَيْنَا تَعَلُّمُ أَرْبَعِ مَسَائِلَ:

اَلْأُوْلَى: اَلْعِلْمُ: وَهُوَ مَعْرِفَةُ اللهِ، وَمَعْرِفَةُ نَبِيِّهِ ، وَمَعْرِفَةُ دِيْنِ الإِسْلَامِ بِالْأَدِلَّةِ

الثَّانِيَةُ: الْعَمَلُ بِهِ.

الثَّالِثَةُ: الدَّعْوَةُ إِلَيْهِ.

الرَّابِعَةُ: الصَّبْرُ عَلَى الأَذَى فِيهِ.

وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ: وَالْعَصْرِ * إِنَّ الإِنْسَانَ لَفِي خُسْرٍ * إِلاَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ سورة العصر كاملة.

قَالَ الشَّافِعِيُّ رَحِمَهُ اللهُ تَعَالَى : لَوْ مَا أَنْزَلَ اللهُ حُجَّةً عَلَى خَلْقِهِ إِلَّا هَذِهِ السُّورَةَ لَكَفَتْهُمْ.

وَقَالَ البُخَارِيُّ رَحِمَهُ اللهُ تَعَالَى : بَابُ: اَلْعِلْمُ قَبْلَ القَوْلِ وَالْعَمَلِ؛ وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿فَاعْلَمْ أَنَّهُ لَا اله إِلاَّ اللهُ وَاسْتَغْفِرْ لِذَنْبِكَ﴾ (محمد:١٩)،

فَبَدَأَ بِالْعِلْمِ ﴿قَبْلَ القَوْلِ وَالعَمَلِ﴾

اِعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ يَجِبُ عَلَى كُلِّ مُسْلِمٍ وَمُسْلِمَةٍ، تَعَلُّمُ هَذِهِ الثَّلاثِ مَسَائِل، وَالْعَمَلُ بِهِنَّ:

اَلْأُوْلَى:أَنَّ اللهَ خَلَقَنَا، وَرَزَقَنَا، وَلَمْ يَتْرُكْنَا هَمَلا، بَلْ أَرْسَلَ إِلَيْنَا رَسُولاً، فَمَنْ أَطَاعَهُ دَخَلَ الجَنَّةَ، وَمَنْ عَصَاهُ دَخَلَ النَّارَ، وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿إِنَّا أَرْسَلْنَا

பகுதி 1 அறிமுகம்

பாடம் 1

கல்விக்கே முதலிடம்

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ اِعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ يَجِبُ عَلَيْنَا تَعَلُّمُ أَرْبَعِ مَسَائِلَ: اَلْأُوْلَى: اَلْعِلْمُ: وَهُوَ مَعْرِفَةُ اللهِ، وَمَعْرِفَةُ بِيِّهِ ، وَمَعْرِفَةُ دِيْنِ الإِسْلَامِ بِالْأَدِلَّةِ الثَّانِيَةُ: الْعَمَلُ بِهِ. الثَّالِثَةُ: الدَّعْوَةُ إِلَيْهِ. الرَّابِعَةُ: الصَّبْرُ عَلَى الأَذَى فِيهِ. وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ: وَالْعَصْرِ * إِنَّ الإِنْسَانَ لَفِي خُسْرٍ * إِلاَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ سورة العصر كاملة. قَالَ الشَّافِعِيُّ رَحِمَهُ اللهُ تَعَالَى : لَوْ مَا أَنْزَلَ اللهُ حُجَّةً عَلَى خَلْقِهِ إِلَّا هَذِهِ السُّورَةَ لَكَفَتْهُمْ. وَقَالَ الْبُخَارِيُّ رَحِمَهُ اللهُ تَعَالَى : بَابُ: اَلْعِلْمُ قَبْلَ القَوْلِ وَالْعَمَلِ؛ وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿فَاعْلَمْ أَنَّهُ لَا اله إِلاَّ اللهُ وَاسْتَغْفِرْ لِذَنْبِكَ﴾ (محمد:١٩)، فَبَدَأَ بِالْعِلْمِ ﴿قَبْلَ القَوْلِ وَالعَمَلِ﴾

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்...

அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக. நான்கு விசயங்களைக் கற்றுக்கொள்வது நம் கடமை.[1]

---

1. **கடமை (வாஜிப் அல்லது ஃபர்ள்) ஒரு விளக்கம்**

   கடமைகள் இரண்டு வகை:

   1) ஃபர்ள் அய்ன் - ஒவ்வொருவர் மீதும் கடமை

   அதாவது. எவராக இருந்தாலும் இந்தக் கடமையிலிருந்து விதிவிலக்குப் பெற முடியாது. ஒவ்வொருவரும் தமக்குத் தாமே பொறுப்பாளி. மற்றவர்களை அதில் நியமிக்க

பாடம் 3

தவ்ஹீதே மூலம்

اِعْلَمْ أَرْشَدَكَ اللهُ لِطَاعَتِهِ، أَنَّ الْحَنِيفِيَّةَ مِلَّةَ إِبْرَاهِيمَ: أَنْ تَعْبُدَ اللهَ وَحْدَهُ، مُخْلِصًا لَهُ الدِّينَ. وَبِذَلِكَ أَمَرَ اللهُ جَمِيْعَ النَّاسِ، وَخَلَقَهُمْ لَهَا؛ كَمَا قَالَ تَعَالَى: ﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالإِنْسَ إِلاَّ لِيَعْبُدُونِ﴾ (الذاريات: ٥٦). وَمَعْنَى يَعْبُدُونِ: يُوَحِّدُونِ، وَأَعْظَمُ مَا أَمَرَ اللهُ بِهِ التَّوْحِيدُ، وَهُوَ: إِفْرَادُ اللهِ بِالْعِبَادَةِ.

அறிந்துகொள்ளுங்கள்: அல்லாஹ் உங்களைத் தனக்குக் கீழ்ப் படிவதின் பக்கம் நேர்வழி காட்டட்டும்.

அவன் நபி இப்றாஹீம் அவர்கள் வழிகாட்டிய அல்ஹனீஃபிய்யாஹ் மார்க்கத்தை உங்களுக்கு ஆக்கியுள்ளான். அதாவது, அல்லாஹ் வை மட்டும் வணங்க வேண்டும். மார்க்கத்தையும் வழிபாட்டை யும் அவனுக்கு மட்டுமே தூய்மையாக செய்ய வேண்டும்.

- எல்லா மக்களுக்கும் அல்லாஹ் இதையே கட்டளையிட் டிருந்தான்.
- இதற்காகத்தான் அவர்களைப் படைக்கவும் செய்தான்.

உயர்ந்தவனாகிய அல்லாஹ்வின் கூற்றில் இதற்கு ஆதாரம் உள்ளது:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ

ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை மட்டும் வணங்க வே தவிர வேறெதற்கும் நான் படைக்கவில்லை.

(அல்குர்ஆன் 51:56)

இங்கு "யஅபுதூன் என்னை வணங்குவார்கள்" என்பதின் பொருள், "யுவஹ்ஹிதூன் எல்லா வணக்கங்களையும் அவனுக்கே ஆக்கு வார்கள்" என்பதாகும்.

பாடம் 5

மூன்று அடிப்படைகள்

فَإِذَا قِيلَ لَكَ: مَا الأُصُولُ الثَّلاثَةُ الَّتِي يَجِبُ عَلَى الإِنْسَانِ مَعْرِفَتُهَا؟ فَقُلْ: مَعْرِفَةُ الْعَبْدِ رَبَّهُ، وَدِينَهُ، وَنَبِيَّهُ مُحَمَّدًا صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ.

மனிதன் கட்டாயம் அறிய வேண்டிய மூன்று அடிப்படைகள் எவை?

இப்படி உங்களிடம் கேட்கப்பட்டால் கூறுங்கள்:

அடியான்

- தன் இறைவனையும்,
- தன் மார்க்கத்தையும்,
- தன்னுடைய தூதர் முஹம்மது ﷺ அவர்களையும்

நன்கு அறிந்திருக்க வேண்டும்.

••

➡ தவ்ஹீதின் அம்சங்கள் மூன்றிலும் இது உருவாகும். அல்லாஹ்வின் இறைமை, வணக்கம், பெயர்கள் மற்றும் தன்மைகள் அனைத்திலும் இது ஏற்படலாம்.

இதற்கு இரண்டு தரங்கள் உண்டு.

பெரிய ஷிர்க் - இது நேரடியாக அல்லாஹ்வுக்கு இணைவைப்பது. உதாரணம்: அல்லாஹ் அல்லாதவரிடம் துஆ கேட்பது.

சிறிய ஷிர்க் - இது பெரியதிற்கு வழிவகுப்பது. உதாரணம்: தாயத்து அணிதல்.

இரண்டு தரங்களும் அபாயமானவை.

இவற்றில் பெரிய தரமே மோசமானது. காரணம்.

இதைச் செய்பவர். காஃபிர். அவருக்கு பாவமன்னிப்பு இல்லை. சுவர்க்கம் இல்லை. அவரின் நற்செயல்கள் அனைத்தும் அழிக்கப்படும்.

ஆனால். சிறிய தரத்தில் அதைச் செய்பவர். காஃபிர் இல்லை. அவர். மன்னிக்கப்படலாம் (அ) தண்டிக்கப்படலாம். இறுதியில் சுவர்க்கம் உண்டு. அவரின். நற்செயல்களில் ஓரளவு அழிக்கப்படும்.

الأَصْلُ الثَّاني
مَعْرِفَةُ دِينِ الإِسْلامِ بِالأَدِلَّةِ

பகுதி 3

இரண்டாம் அடிப்படை:
இஸ்லாம் மார்க்கத்தை ஆதாரங்களுடன் அறிதல்

பாடம் 1

இஸ்லாமும் அதன் மூன்று நிலைகளும்

الأَصْلُ الثَّانِي مَعْرِفَةُ دِيْنِ الإِسْلَامِ بِالْأَدِلَّةِ وَهُوَ: اَلْاِسْتِسْلامُ للهِ بِالتَّوْحِيدِ، وَالانْقِيَادُ لَهُ بِالطَّاعَةِ، وَالْبَرَاءَةُ مِنَ الشِّرْكِ وَأَهْلِهِ وَهُوَ ثَلاثُ مَرَاتِبَ: اَلْإِسْلَامُ، وَالإِيْمَانُ، وَالْإِحْسَانُ. وَكُلُّ مَرْتَبَةٍ لَهَا أَرْكَانٌ.

இஸ்லாம் என்றால்

- வணக்கங்களால் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி,
- அவனிடமே அர்ப்பணமாகி கீழ்ப்படிவதாகும்.
- ஷிர்க் மற்றும் அதைச் செய்வோரை விட்டு விலகியிருப்ப தாகும்.

இது மூன்று நிலைகள் கொண்டது.

1. இஸ்லாம்
2. ஈமான்
3. இஹ்சான்

ஒவ்வொரு நிலைக்கும் தூண்கள் உண்டு.

••

மூன்றாம் அடிப்படை:
உங்கள் நபி முஹம்மது ﷺ அவர்களை அறிதல்

பாடம் 1

முஹம்மது ﷺ அவர்களின் பிறப்பு

*الأَصْلُ الثَّالِثُ *مَعْرِفَةُ نَبِيِّكُمْ مُحَمَّدٍ ـ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ مُحَمَّدُ بْنُ عَبْدِ اللهِ بْنِ عَبْدِ الْمُطَّلِبِ بْنِ هَاشِمٍ، وَهَاشِمٌ مِنْ قُرَيْشٍ، وَقُرَيْشٌ مِنَ الْعَرَبِ، وَالْعَرَبُ مِنْ ذُرِّيَّةِ إِسْمَاعِيلَ بْنِ إِبْرَاهِيمَ الْخَلِيلِ عَلَيْهِ وَعَلَى نَبِيِّنَا أَفْضَلُ الصَّلاةِ وَالسَّلام، وَلَهُ مِنَ الْعُمُرِ ثَلاثٌ وَسِتُّونَ سَنَةً، مِنْهَا أَرْبَعُونَ قَبْلَ النُّبُوَّةِ، وَثَلاثٌ وَعِشْرُونَ فِي النُّبُوَّةِ.

முஹம்மது ﷺ அவர்களின்

- தந்தை அப்துல்லாஹ்.
- பாட்டனார் அப்துல் முத்தலிப்.
- முப்பாட்டனார் ஹாஷிம்.
- ஹாஷிம், குறைஷி வமிசத்தைச் சேர்ந்தவர்.
- குறைஷியர், அரபு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.
- அரபியர்கள் நபி இஸ்மாயீலுடைய வழித்தோன்றல்கள்.
- இஸ்மாயீல் ﷺ, அல்லாஹ்வின் நண்பர் நபி இப்றாஹீமுடைய மகன்.

அல்லாஹ் இவர்கள் மீதும், நம் நபியின் மீதும் சிறப்பான அருளையும் ஈடேற்றத்தையும் பொழிவானாக.

நான்கு சட்டங்கள்

அரபுமூலம்

بِسْـــــمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيـــــمِ

أَسْأَلُ اللهَ الْكَرِيمَ رَبَّ الْعَرْشِ الْعَظِيمِ أَنْ يَتَوَلاكَ فِي الدُّنْيَا وَالآخِرَةِ.

وَأَنْ يَجْعَلَكَ مُبَارَكًا أَيْنَمَا كُنْتَ، وَأَنْ يَجْعَلَكَ مِمَّنْ إِذَا أُعْطِيَ شَكَرَ، وَإِذَا ابْتُلِيَ صَبَرَ، وَإِذَا أَذْنَبَ اسْتَغْفَرَ. فَإِنَّ هَؤُلاءِ الثَّلاثُ عُنْوَانُ السَّعَادَةِ.

اعْلَمْ أَرْشَدَكَ اللهُ لِطَاعَتِهِ: أَنَّ الْحَنِيفِيَّةَ مِلَّةُ إِبْرَاهِيمَ: أَنْ تَعْبُدَ اللهَ، وَحْدَهُ مُخْلِصًا لَهُ الدِّينَ، كَمَا قَالَ تَعَالَى: ﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالإِنسَ إِلاَّ لِيَعْبُدُونِ﴾ (الذاريات: ٥٦). فَإِذَا عَرَفْتَ أَنَّ اللهَ خَلَقَكَ لِعِبَادَتِهِ؛ فَاعْلَمْ أَنَّ الْعِبَادَةَ لا تُسَمَّى عِبَادَةً إِلا مَعَ التَّوْحِيدِ، كَمَا أَنَّ الصَّلاةَ لا تُسَمَّى صَلاةً إِلا مَعَ الطَّهَارَةِ، فَإِذَا دَخَلَ الشِّرْكُ فِي الْعِبَادَةِ فَسَدَتْ، كَالْحَدَثِ إِذَا دَخَلَ فِي الطَّهَارَةِ،

فَإِذَا عَرَفْتَ أَنَّ الشِّرْكَ إِذَا خَالَطَ الْعِبَادَةَ أَفْسَدَهَا، وَأَحْبَطَ الْعَمَلَ، وَصَارَ صَاحِبُهُ، مِنَ الْخَالِدِينَ فِي النَّارِ. عَرَفْتَ أَنَّ أَهَمَّ مَا عَلَيْكَ مَعْرِفَةُ ذَلِكَ لَعَلَّ اللهَ أَنْ يُخَلِّصَكَ مِنْ هَذِهِ الشَّبَكَةِ، وَهِيَ الشِّرْكُ بِاللهِ الَّذِي قَالَ اللهُ تَعَالَى فِيهِ: ﴿إِنَّ اللهَ لاَ يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَن يَشَاءُ﴾ (النساء: ١١٦). وَذَلِكَ بِمَعْرِفَةِ أَرْبَعِ قَوَاعِدَ ذَكَرَهَا اللهُ تَعَالَى فِي كِتَابِهِ.

الْقَاعِدَةُ الأُولى

أَنْ تَعْلَمَ أَنَّ الْكُفَّارَ الَّذِينَ قَاتَلَهُمْ رَسُولُ اللهِ ـ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ـ مُقِرُّونَ بِأَنَّ اللهَ ـ تَعَالَى ـ هُوَ الْخَالِقُ، الْمُدَبِّرُ، وَأَنَّ ذَلِكَ لَمْ يُدْخِلْهُمْ فِي الإِسْلامِ؛ وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿قُلْ مَن يَرْزُقُكُم مِّنَ السَّمَاءِ وَالأَرْضِ أَمَّن يَمْلِكُ السَّمْعَ والأَبْصَارَ وَمَن يُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَيُخْرِجُ الْمَيَّتَ مِنَ الْحَيِّ وَمَن يُدَبِّرُ الأَمْرَ فَسَيَقُولُونَ اللهُ فَقُلْ أَفَلاَ تَتَّقُونَ﴾ (يونس: ٣١).

الْقَاعِدَةُ الثَّانِيَةُ

பாடம் 1

மகிழ்ச்சிக்கு வழி

بِسْـــــــمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيـــــــمِ

أَسْأَلُ اللهَ الْكَرِيمَ رَبَّ الْعَرْشِ الْعَظِيمِ أَنْ يَتَوَلاكَ فِي الدُّنْيَا وَالآخِرَةِ.وَأَنْ يَجْعَلَكَ مُبَارَكًا أَيْنَمَا كُنْتَ، وَأَنْ يَجْعَلَكَ مِمَّنْ إِذَا أُعْطِيَ شَكَرَ، وَإِذَا ابْتُلِيَ صَبَرَ، وَإِذَا أَذْنَبَ اسْتَغْفَرَ. فَإِنَّ هَؤُلاءِ الثَّلاثُ عُنْوَانُ السَّعَادَةِ.

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்..

இம்மையிலும் மறுமையிலும் உங்களைத் தன்னுடைய பொறுப்பில் ஏற்றுக்கொள்ளும்படி மகத்தான அர்ஷின் அதிபதியிடம் வேண்டுகிறேன்.

நீங்கள் எங்கிருந்தாலும் அருள்வளம் பெற்றவராக அவன் உங்களை ஆக்கட்டும்.

- அருட்கொடை கொடுக்கப்படும்போது நன்றி செலுத்துபவர்கள்,
- சோதிக்கப்படும்போது பொறுத்திருப்பவர்கள்,
- பாவம் செய்யும்போது பாவமன்னிப்புக் கோருபவர்கள்

இப்படிப்பட்டவர்களில் அவன் உங்களை ஆக்கட்டும். இந்த மூன்று தன்மைகளும் மகிழ்ச்சிக்குரிய வாழ்க்கையின் அடையாளங்களாகும்.[1]

---

1. இந்நூலைப் படிக்கும் ஒவ்வொரு மாணவருக்காகவும் இமாமவர்கள் செய்கிற பிரார்த்தனை இது. ஓர் ஆசிரியரின் உள்ளம் எப்போதும் தம் மாணவர்களுக்காகக் கனிந்ததாகவும். அவர்களின் நல்வாழ்வுக்காக பிரார்த்தனை செய்வதாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆசிரியராக இமாமவர்கள் இருந்தார்கள். தம் மாணவர்களை அல்லாஹ்வின் பாதுகாப்பில் ஒப்படைத்து பிரார்த்திக்கிறார்கள். அல்லாஹ்வின் பாதுகாப்பு ஒன்று கிடைத்துவிட்டால். அதற்குப்பின் எதுதான் தேவை? அடியானின் காரியங்கள் அல்லாஹ்வின் பொறுப்பில் அமைந்துவிட்டால். அவனே அந்த அடியானை வழிநடத்துவான். சத்தியத்தைத் தெளிவுபடுத்துவான். ஷிர்க். குஃப்ர். பித்அத்களை விட்டுப் பாதுகாப்பான். இதைத்தான் இமாமவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதுதான் மகிழ்ச்சியான வாழ்க்கையின் பக்கம் வழிகாட்டும் என்கிறார்கள். அந்த வாழ்க்கைக்கு மூன்று வழிகளையும் ➡

பாடம் 2

தவ்ஹீதும் நல்ல அமல்களும்

اعْلَمْ أَرْشَدَكَ اللهُ لِطَاعَتِهِ: أَنَّ الْحَنِيفِيَّةَ مِلَّةُ إِبْرَاهِيمَ: أَنْ تَعْبُدَ اللهَ، وَحْدَهُ مُخْلِصًا لَهُ الدِّينَ، كَمَا قَالَ تَعَالَى: ﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالإِنسَ إِلاَّ لِيَعْبُدُونِ﴾ الذاريات: ٥٦. فَإِذَا عَرَفْتَ أَنَّ اللهَ خَلَقَكَ لِعِبَادَتِهِ؛ فَاعْلَمْ أَنَّ الْعِبَادَةَ لا تُسَمَّى عِبَادَةً إِلا مَعَ التَّوْحِيدِ، كَمَا أَنَّ الصَّلاةَ لا تُسَمَّى صَلاةً إِلا مَعَ الطَّهَارَةِ، فَإِذَا دَخَلَ الشِّرْكُ فِي الْعِبَادَةِ فَسَدَتْ، كَالْحَدَثِ إِذَا دَخَلَ فِي الطَّهَارَةِ، فَإِذَا عَرَفْتَ أَنَّ الشِّرْكَ إِذَا خَالَطَ الْعِبَادَةَ أَفْسَدَهَا، وَأَحْبَطَ الْعَمَلَ، وَصَارَ صَاحِبُهُ، مِنَ الْخَالِدِينَ فِي النَّارِ. عَرَفْتَ أَنَّ أَهَمَّ مَا عَلَيْكَ مَعْرِفَةُ ذَلِكَ لَعَلَّ اللهَ أَنْ يُخَلِّصَكَ مِنْ هَذِهِ الشَّبَكَةِ، وَهِيَ الشِّرْكُ بِاللهِ الَّذِي قَالَ اللهُ تَعَالَى فِيهِ: ﴿إِنَّ اللهَ لاَ يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَن يَشَاءُ﴾ النساء: ١١٦ وَذَلِكَ بِمَعْرِفَةِ أَرْبَعِ قَوَاعِدَ ذَكَرَهَا اللهُ تَعَالَى فِي كِتَابِهِ.

அறிந்துகொள்ளுங்கள்: அல்லாஹ் அவனுக்குக் கட்டுப்படுவதின் பக்கம் உங்களுக்கு வழிகாட்டட்டும். இப்றாஹீமின் மார்க்கமாகிய அல்ஹனீஃபிய்யா என்பது அல்லாஹ்வை மட்டும் வணங்கி அவனுக்கே வணக்கத்தைத் தூய்மையாகக் கலப்படமின்றிச் செய்வதாகும்.[2] அதாவது, அல்லாஹ் கூறுகிறான்:

2. இப்றாஹீம் ﷺ அவர்களை ஹனீஃப் என்று அல்லாஹ் சொல்லியிருக்கிறான். யார் அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டு. அவனைத் தவிர உள்ள அனைத்தையும் நிராகரிக் கிறாரோ அவரே ஹனீஃப். அவர் அல்லாஹ்வைத் தம் உள்ளத்தாலும். செயல்களாலும். எண்ணங்களாலும். நோக்கங்களாலும் ஏற்றுக்கொண்டு. அனைத்தையும் அவன் ஒருவனுக்காகவே செய்வார். எந்த வடிவிலும் அவரிடம் ஷிர்க் இருக்காது. இதுதான் அடிப்படையில் மார்க்கம். இதையே அல்ஹனீஃபிய்யா என்பார்கள். இப்றாஹீம் ﷺ அவர்களின் மார்க்கம் இப்படிப்பட்டதாக இருந்தது. அவர்களின் இந்தப் பாதையைப் பின் பற்றும்படி மற்ற நபிமார்களுக்கும் அல்லாஹ் அறிவுறுத்தினான். இப்றாஹீம் ﷺ அவர்களை நபிமார்களின் தந்தை என்ற அந்தஸ்தில் உயர்த்தியது இந்த அல்ஹனீஃபிய்யா என்ற மார்க்கம்தான். பின்வருபவை இதற்கு ஆதாரங்கள்:

إِنَّ إِبْرَاهِيمَ كَانَ أُمَّةً قَانِتًا لِلَّهِ حَنِيفًا وَلَمْ يَكُ مِنَ الْمُشْرِكِينَ

நிச்சயமாக இப்றாஹீம், பின்பற்றப்படும் ஒரு தலைவராகவும். ➡

الْقَاعِدَةُ الأُولَى أَنْ تَعْلَمَ أَنَّ الْكُفَّارَ الَّذِينَ قَاتَلَهُمْ رَسُولُ اللهِ ـ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ـ مُقِرُّونَ بِأَنَّ اللهَ ـ تَعَالَى ـ هُوَ الْخَالِقُ، الْمُدَبِّرُ، وَأَنَّ ذَلِكَ لَمْ يُدْخِلْهُمْ فِي الإِسْلامِ؛ وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿قُلْ مَن يَرْزُقُكُم مِّنَ السَّمَاءِ وَالأَرْضِ أَمَّن يَمْلِكُ السَّمْعَ والأَبْصَارَ وَمَن يُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَيُخْرِجُ الْمَيَّتَ مِنَ الْحَيِّ وَمَن يُدَبِّرُ الأَمْرَ فَسَيَقُولُونَ اللهُ فَقُلْ أَفَلاَ تَتَّقُونَ﴾ يونس: ٣١

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் போர் செய்த காஃபிர்கள் அல்லாஹ்தான் படைப்பாளன், நிர்வகிப்பவன் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவர்களை அது இஸ்லாமிய மார்க்கத்திற்குள் நுழைந்தவர்களாக ஆக்கிவிடவில்லை என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

(நபியே!) நீங்கள் (அவர்களை நோக்கி), "வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? (உங்களுடைய) செவிப்புலனுக்கும் பார்வைகளுக்கும் உரிமையாளன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? (உலகின்) எல்லா விவகாரங்களையும் திட்டமிட்டு நிகழ்த்துபவன் யார்?" என்று கேட்பீராக! அதற்கவர்கள், 'அல்லாஹ்தான்' என்று கூறுவார்கள். அப்படியானால் அல்லாஹ்வுக்கு நீங்கள் பயப்பட வேண்டாமா? என்று கேட்பீராக.[4] *(அல்குர்ஆன் 10: 31)*

---

4. தவ்ஹீது மூன்று வகைப்படும்.
   1. தவ்ஹீதுர் ருபூபிய்யா. அல்லாஹ் ஒருவனே படைப்பாளன், வாழ்வாதாரம் அளிப்பவன், ஆட்சியதிகாரத்தின் சொந்தக்காரன் என்று ஒருமைப்படுத்துதல்.
   2. தவ்ஹீதுல் உலூஹிய்யா. அல்லாஹ் ஒருவனே வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் என்று ஒருமைப்படுத்துதல்.
   3. தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத். அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் நம்பிக்கை கொண்டு, அவற்றைக் கொண்டு அவனை ஒருமைப்படுத்துதல்.

   இந்த மூன்று வகைகளில் நபியவர்களின் காலத்து இணைவைப்பாளர்கள் தவ்ஹீதுர் ருபூபிய்யாவை ஏற்றிருந்தார்கள். அவர்களிடம் வானங்கள் பூமியின் படைப்பாளன் யார், அனைவருக்கும் வாழ்வாதாரம் அளிப்பவன் யார், அனைத்தையும் ஆட்சி செய்பவன் யார் என்று கேட்டால், அல்லாஹ் என்றே பதில் சொன்னார்கள். ➡

சிபாரிசு இரண்டு வகை:

1. மறுக்கப்பட்டது
2. ஏற்றுக்கொள்ளப்பட்டது

மறுக்கப்பட்ட சிபாரிசு: அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் சக்தியற்ற விசயங்களில் அல்லாஹ் அல்லாதவர்களிடம் தேடப்படும் சிபாரிசு மறுக்கப்பட்ட சிபாரிசாகும். அல்லாஹ் கூறுகிறான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُواْ أَنفِقُواْ مِمَّا رَزَقْنَاكُم مِّن قَبْلِ أَن يَأْتِيَ يَوْمٌ لاَّ بَيْعٌ فِيهِ وَلاَ خُلَّةٌ وَلاَ شَفَاعَةٌ وَالْكَافِرُونَ هُمُ الظَّالِمُونَ

➡ இன்னும் சொல்லப்போனால், தாங்கள் அழைத்துப் பிரார்த்தனை செய்து சிபாரிசு கேட்கிறவை எதுவுமே தங்களுக்குச் சுயமாக நன்மையோ தீமையோ செய்துவிட முடியாது என்றும் சொன்னார்கள். தாங்கள் அவற்றை வணங்குதின் ஒரே காரணம், அவை அல்லாஹ்விடம் தங்களுக்காகப் பரிந்து பேசி, அவனுடைய நெருக்கத்தைப் பெற்றுத் தரும் என்றார்கள். இருப்பினும் அல்லாஹ் அவர்களைப் பொய்யர்கள் என்றும், காஃபிர்கள் என்றும் கண்டித்து, அவர்களை நேர்வழியில் செலுத்தப் போவதில்லை என்று எச்சரிக்கை செய்தான். தங்கள் செயலை நியாயப்படுத்தி தர்க்கம் செய்த அவர்களுக்கு மறுமையில் தீர்ப்பளிக்கப்படும் என்றான்.

ஆக, இதிலிருந்து ஷஃபாஅத் எனப்படும் சிபாரிசை ஒருவர் அல்லாஹ்வின் அனுமதியின்றி கேட்பதும் ஷிர்க் என்று உறுதியாகிறது. சிபாரிசு யாரிடம் கேட்கப்படுகிறதோ, அவரைப் படைப்பவர் என்றோ, பரிபாலிப்பவர் என்றோ நம்பாவிட்டாலும், அல்லாஹ்விடம் எங்களுக்காக சிபாரிசு செய்யுங்கள் என்று அவரை அழைத்துப் பிரார்த்திப்பது மிகப்பெரிய ஷிர்க் என்றே நிரூபணமாகிறது. அன்று அரபு முஷ்ரிக்குகள் செய்த அதே காரியத்தையே இன்று முஸ்லிம்களில் நிறைய பேர் தர்காக்களில் செய்கிறார்கள். இவர்களும் அவர்களைப் போல், "நாங்கள் ஒன்றும் இந்த அவ்லியாக்களை அல்லாஹ் என்று நம்பி வணங்கவில்லை. அல்லாஹ்வின் உதவியில்லாமல் இவர்களாக எந்த நன்மையும் செய்துவிட முடியாது. இவர்கள் வழியாக அல்லாஹ்வின் உதவியையே நாங்கள் நாடுகிறோம். இவர்கள் மகான்கள். இவர்கள் நமக்காக சிபாரிசு செய்தால், நிச்சயம் அல்லாஹ் ஏற்றுக்கொள்வான். அவனிடம் நெருக்கம் நமக்குக் கிடைக்கும். எனவேதான் இவர்களிடம் செல்கிறோம். இவர்களை அழைத்து சிபாரிசு கேட்கிறோம். இதிலென்ன தவறு?" என்று வாதம் செய்கிறார்கள்.

இவர்களின் நம்பிக்கையும் அரபு முஷ்ரிக்குகளின் நம்பிக்கையும் ஒன்றே என்பதைச் சிந்திப்பதில்லை. இவர்கள் செய்கிற இந்தக் காரியமும் ஷிர்க்கே என்று உணர்வதில்லை. இவர்களைப் பொறுத்தவரை ஷிர்க் என்றால், அந்த நல்லடியார்களையே அல்லாஹ்வாகநம்புவதுதான். ஆனால் அது தவ்ஹீதுர் ருபூபிய்யாவில் வருகிற ஷிர்க். அது இவர்களிடம் இல்லை என்பதற்காக. இவர்களின் செயலில் வருகிற ஷிர்க்கை எப்படிச் சரிகாண முடியும்? இதுவோ தவ்ஹீதுல் உலூஹிய்யாவில் ஏற்படுகிற ஷிர்க் ஆயிற்றே?

الْقَاعِدَةُ الرَّابِعَةُ أَنَّ مُشْرِكِي زَمَانَنَا أَغْلَظُ شِرْكًا مِنَ الأَوَّلِينَ، لأَنَّ الأَوَّلِينَ يُشْرِكُونَ فِي الرَّخَاءِ، وَيُخْلِصُونَ فِي الشِّدَّةِ، وَمُشْرِكُو زَمَانَنَا شِرْكُهُمْ دَائِمٌ فِي الرَّخَاءِ وَالشِّدَّة؛ وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿فَإِذَا رَكِبُوا فِي الْفُلْكِ دَعَوُا اللهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ فَلَمَّا نَجَّاهُمْ إِلَى الْبَرِّ إِذَا هُمْ يُشْرِكُونَ﴾)العنكبوت: ٦٥(

تَمَّتْ وَصَلَّى اللهُ عَلَى مُحَمَّدٍ وعلى آلِهِ وَصَحْبِهِ وَسَلَّمَ

நம் காலத்தில் வாழும் முஷ்ரிக்குகள் முற்கால முஷ்ரிக்குகளை விட இணைவைத்தலில் கடுமையானவர்கள்; மோசமானவர்கள். ஏனென்றால், முற்கால மக்கள் மகிழ்ச்சியான காலத்தில்தான் ஷிர்க் வைத்தார்கள். கஷ்டமான காலத்தில் அல்லாஹ் ஒருவனை மட்டும் அழைத்தார்கள். நம் காலத்திலுள்ள முஷ்ரிக்குகளின் இணைவைத்தலோ மகிழ்ச்சியான கஷ்டமான எல்லாக் காலத்திலும் ஒன்றாகவே இருக்கிறது.

فَإِذَا رَكِبُوا فِي الْفُلْكِ دَعَوُا اللهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ فَلَمَّا نَجَّاهُمْ إِلَى الْبَرِّ إِذَا هُمْ يُشْرِكُونَ

(மனிதர்கள்) கப்பலில் ஏறி (ஆபத்தில் சிக்கி)க் கொண்டால், அவர்கள் முற்றிலும் அல்லாஹ்வையே வணங்கியவர்களாகக் கலப்பற்ற (பரிசுத்த) மனதோடு அவனை அழைத்துப் பிரார்த்தனை செய்கின்றார்கள். அவன், அவர்களைக் கரையில் (இறக்கிப்) பாதுகாத்துக் கொண்ட பின்னர் அவனுக்கு அவர்கள் (பலரை) இணையாக்கி வணங்குகின்றார்கள்.[11]

(அல்குர்ஆன் 29:65)

11. நம்முடைய காலத்தில் வாழும் முஷ்ரிக்குகள் நபியவர்களின் காலத்தில் வாழ்ந்த முஷ்ரிக்குகளை மோசமானவர்கள். எப்படியெனில். அந்த முஷ்ரிக்குகள் தங்களுக்கு ஆபத்துவந்தால். அல்லாஹ்விடம் அபயம் தேடிப்பிரார்த்தித்தார்கள். இன்றைய முஷ்ரிக்குகளோ ஆபத்தான நேரத்திலும் அல்லாஹ் அல்லாத மற்றவர்களை அழைத்துப் பிரார்த்திக்கிறார்கள். மகிழ்ச்சியான அல்லது துன்பமான எந்தச் சமயத்திலும் இவர்கள் இணைவைக்கிறார்கள். எந்த நிலையிலும் அல்லாஹ்வைச் சாராதவர்களாக. அவனிடம் உதவி தேடாதவர்களாக இருக்கிறார்கள். அபயம் தேடி அழைத்தால் தங்கள் அவ்லியாக்கள் நிச்சயம் கைவிடமாட்டார்கள் என்று நம்புகிறார்கள். அதற்குத் தோதுவான கதைகளையும் புனைந்து வைத்திருக்கிறார்கள். அல்லாஹ்தான் இவர்களை நேர்வழி செலுத்த வேண்டும். அவனே உதவி தேடத் தகுதியானவன்.